ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

மொழிபெயர்ப்பு

எனது இலக்கம் : PS/PCA/11/DCC/06/26- ii
திகதி : 2023 செப்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேசச் செயலாளர்கள்,
அனைவருக்கும்.

பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடும் போது அது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் என்பவற்றினை விழிப்பூட்டல்.

அரச மற்றும் அரை அரச நிறுவனங்களினால் மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும்போதும் மற்றும் நடைமுறைப்படுத்தும் போதும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் என்பவற்றினை விழிப்பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அரச உத்தியோகத்தர்களுக்கும் அரசியல் அதிகார பீடத்திற்குமிடையில் இடைவெளி ஏற்படுவதும், இந்த அனைத்துத் தரப்பினருக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு முறையாக இடம்பெறாமையும் காரணத்தால் இரு தரப்பினரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

2. அவ்வாறே மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் என்பவற்றின் தலைவர்களினாலும் மாண்புமிகு சனாதிபதியவர்களுக்கு இது தொடர்பாக தொடர்ந்தும் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டு வருவதுடன், அரசியல் அதிகார பீடத்திற்கும் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்புக் குறைவடைந்த காரணத்தினால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டு அபிவிருத்திப் பணிகளுக்கு இடையூறு ஏற்படுகின்றமை தொடர்பாகவும் எனது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

3. எனவே, இதன் பின்னர் அரச மற்றும் அரை அரச நிறுவனங்களினால் மாவட்ட மட்டத்தில் அல்லது பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான திட்டங்களை தயாரிக்கும் போதும் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்தும் போதும் அது பற்றி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் என்பவற்றிற்கு விழிப்பூட்டி அவர்களுடைய ஒத்துழைப்பினையும் பெற்று சிறந்த ஒருங்கிணைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

நன்றி
இப்படிக்கு - உண்மையுள்ள

ஒப்பம்/ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்க
சனாதிபதியின் செயலாளர்
தொலைபேசி : +94 11 2354420 தொலைநகல் : +94 11 2446657
மின்னஞ்சல் : prsec@presidentsoffice.lk